©
தமிழ்நாடு அரசு
2009

[Regd. No. TN/CCN/467/2009-11.
[விலை: ரூ. 6.40 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 37] சென்னை, புதன்கிழமை, செப்டம்பர் 23, 2009
புரட்டாசி 7, திருவள்ளுவர் ஆண்டு–2040

## பகுதி IV— பிரிவு 2 இன் இணைப்பு

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2009–ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 4–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—**

**சட்ட எண் 14/2009**

***1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**1.** (1) இந்தச் சட்டம், 2009–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 21/1994. **2.** 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 37–ஆம் பிரிவில், (2)–ஆம் உட்பிரிவிற்குப் பின்னர், பின்வரும் உட்பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது :– 37-ஆம் பிரிவிற்கான திருத்தம்.

"(2–A) 38–ஆம் பிரிவின் (3)–ஆம் உட்பிரிவின் (e) எனும் கூறின்படி உறுப்பினராக இருப்பதற்குத் தகுதியற்றவராக ஆக்கப்பட்ட நபரொருவர் அவ்வாறு

தகுதியின்மை அடைந்த தேதியிலிருந்து ஆறு ஆண்டு கால அளவுக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகுதியற்றவராதல் வேண்டும்.".

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப்பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2009–ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 5–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:—**

## சட்ட எண் 15/2009

**தமிழ்நாடு மாநிலத்திலுள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் தொடர்பான சட்டங்களை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

### பகுதி–I

### முன்னுரையாக

**1.** (1) இந்தச் சட்டம், 2009–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

### பகுதி–II

### 1971—ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 15/1971. **2.** 1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின், 120–ஆம் பிரிவில், (4)–ஆம் உட்பிரிவில் (a) எனும் கூறுக்குப் பதிலாக, பின்வரும் கூறானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது :— 120–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

“(a). (b) எனும் கூறில் பிறவாறு வகை செய்யப்பட்டுள்ளவாறு தவிர, மன்றமானது, வேளாண்மை நோக்கத்திற்காக தனிப்பட்ட வகையில் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றவையல்லாத மற்றும் கட்டிடங்களைக் கொண்டிருப்பவை அல்லாத அல்லது அவற்றை அடுத்திருப்பவை மற்றும் அவற்றோடு இணைந்திருப்பவை அல்லாத நிலங்களைப் பொறுத்த அளவில், அவற்றின் அமைவிடத்தைக் கருத்தில் கொண்டு, அரசினால் வகுத்துரைக்கப்படக்கூடிய ஒரு சதுர அடிக்கான குறைந்த அளவு மற்றும் அதிக அளவு வீதங்களுக்கு உட்பட்டு, மன்றம் நிர்ணயிக்கக் கூடிய அத்தகைய வீதத்தில் அத்தகைய நிலங்களின் மீது சொத்து வரியை விதிக்கலாம்.’’.

### பகுதி–III

### 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 25/1981. **3.** 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின், 121–ஆம் பிரிவில், (4)–ஆம் உட்பிரிவில் (a) எனும் கூறுக்குப் பதிலாக, பின்வரும் கூறானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது :— 121–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

“(a). (b) எனும் கூறில் பிறவாறு வகை செய்யப்பட்டுள்ளவாறு தவிர, மன்றமானது, வேளாண்மை நோக்கத்திற்காக தனிப்பட்ட வகையில் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றவையல்லாத மற்றும் கட்டிடங்களைக் கொண்டிருப்பவை அல்லாத அல்லது அவற்றை அடுத்திருப்பவை மற்றும் அவற்றோடு இணைந்திருப்பவை அல்லாத நிலங்களைப் பொறுத்த அளவில், அவற்றின் அமைவிடத்தைக் கருத்தில் கொண்டு, அரசினால் வகுத்துரைக்கப்படக்கூடிய ஒரு சதுர அடிக்கான குறைந்த அளவு மற்றும் அதிக அளவு வீதங்களுக்கு உட்பட்டு, மன்றம் நிர்ணயிக்கக் கூடிய அத்தகைய வீதத்தில் அத்தகைய நிலங்களின் மீது சொத்து வரியை விதிக்கலாம்.’’.

## பகுதி–IV

## 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கான திருத்தம்.

81–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**4.** **1920**–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின், **81**–ஆம் பிரிவில், **(3)**–ஆம் உட்பிரிவில், அதன் வரம்புரை உள்ளடங்கலான **(a)** எனும் கூறுக்குப் பதிலாக, பின்வரும் கூறானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது :– தமிழ்நாடு சட்டம் V/1920.

"(a). (b) எனும் கூறில் பிறவாறு வகை செய்யப்பட்டுள்ளவாறு தவிர, மன்றமானது, வேளாண்மை நோக்கத்திற்காக தனிப்பட்ட வகையில் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றவையல்லாத மற்றும் கட்டிடங்களைக் கொண்டிருப்பவை அல்லாத அல்லது அவற்றை அடுத்திருப்பவை மற்றும் அவற்றோடு இணைந்திருப்பவை அல்லாத நிலங்களைப் பொறுத்த அளவில், அவற்றின் அமைவிடத்தைக் கருத்தில் கொண்டு, மாநில அரசினால் வகுத்துரைக்கப்படக்கூடிய ஒரு சதுர அடிக்கான குறைந்த அளவு மற்றும் அதிக அளவு வீதங்களுக்கு உட்பட்டு, மன்றம் நிர்ணயிக்கக் கூடிய அத்தகைய வீதத்தில் அத்தகைய நிலங்களின் மீது சொத்து வரியை விதிக்கலாம்.".

## பகுதி–V

நீக்கம்.

**5.** **1997**–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டம், இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகிறது. தமிழ்நாடு சட்டம் 65/1997.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப்பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2009–ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 5–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது ; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—**

## சட்ட எண் 16/2009

***1976–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனச்) சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம், 2009–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

குடியரசுத் தலைவரின் சட்டம் 25/1976.

4–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** 1976–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனச்) சட்டத்தின், 4–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவில் ''முப்பத்து மூன்று ஆண்டுகள் இரண்டு திங்களுக்கு'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ''முப்பத்து மூன்று ஆண்டுகள் எட்டு திங்களுக்கு'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப்பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2009–ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 5–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—**

## சட்ட எண் 18/2009

**2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப்பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

1. (1) இந்தச் சட்டம், 2009–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது, 2008–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 30–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 32/2006. 2. (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் என குறிப்பிடப்படுவதான) 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச்சட்டத்தின் (2)–ஆம் பிரிவில், 2–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (1)–ஆம் கூறுக்குப் பதிலாகப் பின்வரும் கூறுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

(1) "கூடுதல் ஆணையர்" என்றால், 48–ஆம் பிரிவின் கீழ் வணிகவரி கூடுதல் ஆணையர் ஒருவராக நியமிக்கப்பட்ட நபர் எவரும் என்று பொருள்படும்;

(1–A) "நிருவாக துணை ஆணையர்" என்றால், 48–ஆம் பிரிவின் கீழ் வணிகவரி நிருவாகத் துணை ஆணையர் ஒருவராக நியமிக்கப்பட்ட நபர் எவரும் என்று பொருள்படும்;

(2) (2)–ஆம் கூறுக்குப் பதிலாகப் பின்வரும் கூறானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

(2) "மேல்முறையீட்டுத் துணை ஆணையர்" என்றால், 48–ஆம் பிரிவின் கீழ் வணிகவரி மேல்முறையீட்டுத் துணை ஆணையர் ஒருவராக நியமிக்கப்பட்ட நபர் எவரும் என்று பொருள்படும்;

(3) (3)–ஆம் கூறுக்குப் பதிலாகப் பின்வரும் கூறானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

(3) "மேல்முறையீட்டு இணை ஆணையர்" என்றால், 48–ஆம் பிரிவின் கீழ் வணிகவரி மேல்முறையீட்டு இணை ஆணையர் ஒருவராக நியமிக்கப்பட்ட நபர் எவரும் என்று பொருள்படும்;

(4) (5)–ஆம் கூறுக்குப் பின்னர் பின்வரும் கூறானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:-

(5–A) "உதவி ஆணையர்" என்றால் 48–ஆம் பிரிவின் கீழ் வணிகவரி உதவி ஆணையர் ஒருவராக நியமிக்கப்பட்ட நபர் எவரும் என்று பொருள்படும்;

(5) (7)–ஆம் கூறானது நீக்கப்படுதல் வேண்டும்;

(6) (8)–ஆம் கூறானது நீக்கப்படுதல் வேண்டும்;

(7) (13)–ஆம் கூறுக்குப் பதிலாகப் பின்வரும் கூறானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"(13) "வணிகவரி அலுவலர்" என்றால் வணிகவரி அலுவலர் என்ற பெயரால் குறிக்கப்பட்டோ அல்லது அவரது பதவியின் காரணமாகவோ, வணிகவரி அலுவலருக்குரிய அதிகாரத்தைச் செயல்படுத்தும் பொருட்டு, ஆணையரால் நியமிக்கப்பட்ட நபர் எவரும் என்று பொருள்படும்;

(8) (17)–ஆம் கூறானது நீக்கப்படுதல் வேண்டும்;

(9) (18)–ஆம் கூறுக்கு பின்னர், பின்வரும் கூறானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

(18-A) "துணை ஆணையர் (வரிக்கணிப்பு)" என்றால் 48–ஆம் பிரிவின் கீழ் வணிகவரித் துணை ஆணையர் (வரிக்கணிப்பு) ஒருவராக நியமிக்கப்பட்ட நபர் எவரும் என்று பொருள்படும்;

(10) (25)–ஆம் கூறுக்குப் பின்னர், பின்வரும் கூறானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

(25-A) “வணிகவரி இணை ஆணையர் (செயலாக்கம்)” என்றால் 48–ஆம் பிரிவின் கீழ் வணிகவரி இணை ஆணையர் (செயலாக்கம்) ஒருவராக நியமிக்கப்பட்ட நபர் எவரும் என்று பொருள்படும்;

(11) (39)–ஆம் கூறுக்குப் பதிலாகப் பின்வரும் கூறானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

(39) "மண்டல துணை ஆணையர்" (Territorial Deputy Commissioner) என்றால், 48–ஆம் பிரிவின் கீழ் வணிகவரி மண்டல துணை ஆணையர் ஒருவராக நியமிக்கப்பட்ட நபர் எவரும் என்று பொருள்படும்;

32–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**3.** முதன்மைச் சட்டத்தின் 32–ஆம் பிரிவின் (2)–ஆம் உட்பிரிவில் “மண்டல உதவி ஆணையர்” என்னும் சொற்றொடருக்குப் பதிலாக “மண்டல துணை ஆணையர்” என்னும் சொற்றொடரானது சேர்க்கப்படுதல் வேண்டும்.

48–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**4.** முதன்மைச் சட்டத்தின் 48–ஆம் பிரிவில்,

(i) ஓரத்தலைப்பிற்குப் பதிலாகப் பின்வரும் ஓரத்தலைப்பானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

**“வணிக வரி ஆணையர், கூடுதல் வணிக வரி ஆணையர்கள், வணிகவரி மேல்முறையீட்டு இணை ஆணையர்கள், வணிகவரி இணை ஆணையர்கள், வணிக வரி மேல்முறையீட்டுத் துணை ஆணையர்கள், வணிக வரி துணை ஆணையர்கள், வணிக வரி உதவி ஆணையர்கள் ஆகியோரின் அமர்த்துகை.”;**

(ii) 48–ஆம் பிரிவிற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது சேர்க்கப்படுதல் வேண்டும்.

அரசு, ஒரு வணிகவரி ஆணையரையும் மற்றும் தேவையெனக் கருதும் பல கூடுதல் வணிகவரி ஆணையர்களையும், வணிகவரி மேல்முறையீட்டு இணை ஆணையர்களையும், வணிகவரி இணை ஆணையர்களையும், வணிகவரி (செயலாக்கம்) இணை ஆணையர்களையும், வணிகவரி மேல்முறையீட்டுத் துணை ஆணையர்களையும், வணிகவரி மண்டல துணை ஆணையர்களையும், வணிகவரி நிருவாக துணை ஆணையர்களையும், வணிகவரி (வரிக்கணிப்பு) துணை ஆணையர்களையும், வணிகவரி (செயலாக்கம்) துணை ஆணையர்களையும் மற்றும் வணிகவரி உதவி ஆணையர்களையும் தாம் தக்கதெனக் கருதுகிறவாறு இந்தச் சட்டத்தினால் அல்லது அதன்படி முறையே அவர்களுக்கென அளிக்கப்பட்ட பணிகளைச் செய்யும் நோக்கத்திற்காக அமர்த்தலாம். வணிகவரி ஆணையர் தமக்கென அளிக்கப்பட்ட பணிகளை மாநிலம் முழுவதிலும் மேற்கொள்ளுதல் வேண்டும்; மற்றும் பிற அலுவலர்கள், தங்களுடைய பணிகளை, அரசு அல்லது இதன் பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரஅமைப்பு அல்லது அலுவலர் தங்களுக்கென ஒதுக்கும் அத்தகைய உள்ளூர் எல்லைகளில் மேற்கொள்ளுதல் வேண்டும்.

49–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**5.** முதன்மைச் சட்டத்தின் 49–ஆம் பிரிவில்,

(i) ஓரத்தலைப்பில் “உதவி ஆணையர்” என்னும் சொற்றொடருக்குப் பதிலாக “துணை ஆணையர்” என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(ii) “மண்டல உதவி ஆணையர் அல்லது உதவி ஆணையர் (வரிக்கணிப்பு)” என்னும் சொற்றொடருக்குப் பதிலாக “மண்டல துணை ஆணையர் அல்லது துணை ஆணையர் (வரிக்கணிப்பு)” என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(iii) “மண்டல உதவி ஆணையர் மற்றும் உதவி ஆணையர் (வரிக்கணிப்பு)” என்னும் சொற்றொடர் வருகின்ற இடங்களிலெல்லாம் “மண்டல துணை ஆணையர் மற்றும் துணை ஆணையர் (வரிக்கணிப்பு)” என்னும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(iv) “துணை ஆணையர்” என்னும் சொற்றொடர் வருகின்ற இரண்டு இடங்களில் “இணை ஆணையர்” என்னும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

51–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**6.** முதன்மைச் சட்டத்தின் 51–ஆம் பிரிவில்,

(i) ஓரத்தலைப்பு உள்ளடங்கலாக “மேல்முறையீட்டு உதவி ஆணையர்” என்னும் சொற்றொடர் வருகின்ற இடங்களிலெல்லாம் “மேல்முறையீட்டுத் துணை ஆணையர்” என்னும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(ii) (1)–ஆம் உட்பிரிவில், “உதவி ஆணையர் (வரிக்கணிப்பு)” என்னும் சொற்றொடருக்குப் பதிலாக “துணை ஆணையர் (வரிக்கணிப்பு)” என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

**7.** முதன்மைச் சட்டத்தின் 52–ஆம் பிரிவில், 52–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(i) ஓரத்தலைப்பு உள்ளடங்கலாக "மேல்முறையீட்டுத் துணை ஆணையர்" என்னும் சொற்றொடர் வருகின்ற இடங்களிலெல்லாம் "மேல்முறையீட்டு இணை ஆணையர்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(ii) "உதவி ஆணையர் (வரிக்கணிப்பு)" என்னும் சொற்றொடர் வருகின்ற மூன்று இடங்களில் "துணை ஆணையர் (வரிக்கணிப்பு)" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

**8.** முதன்மைச் சட்டத்தின் 53–ஆம் பிரிவில், 53–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(i) ஓரத்தலைப்பு உள்ளடங்கலாக "துணை ஆணையர்" என்னும் சொற்றொடர் வருகின்ற இடங்களில் எல்லாம் "இணை ஆணையர்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(ii) **(2)**–ஆம் உட்பிரிவில், "மேல்முறையீட்டு உதவி ஆணையர் அல்லது மேல்முறையீட்டுத் துணை ஆணையர்" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக "மேல்முறையீட்டுத் துணை ஆணையர் அல்லது மேல்முறையீட்டு இணை ஆணையர்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

**9.** முதன்மைச் சட்டத்தின் 54–ஆம் பிரிவில், ஓரத்தலைப்பு உள்ளடங்கலாக "துணை ஆணையர்" என்னும் சொற்றொடர் வருகின்ற இடங்களிலெல்லாம் "இணை ஆணையர்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். 54–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**10.** முதன்மைச் சட்டத்தின் 55–ஆம் பிரிவில், 55–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(i) ஓரத்தலைப்பு உள்ளடங்கலாக "இணை ஆணையர்" என்னும் சொற்றொடர் வருகின்ற இடங்களிலெல்லாம் "கூடுதல் ஆணையர்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(ii) "துணை ஆணையர்" என்னும் சொற்றொடர் வருகின்ற இரண்டு இடங்களில் "இணை ஆணையர்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

**11.** முதன்மைச் சட்டத்தின் 56–ஆம் பிரிவில், 56–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(i) **(1)**–ஆம் உட்பிரிவில் "ஒரு மேல்முறையீட்டுத் துணை ஆணையரிடமிருந்து மற்றொரு மேல்முறையீட்டுத் துணை ஆணையருக்கு அல்லது ஒரு மேல்முறையீட்டு உதவி ஆணையரின் முன்பாக நிலுவையில் உள்ள ஒரு மேல்முறையீடு மற்றொரு மேல்முறையீட்டு உதவி ஆணையர் என்னும் சொற்றொடருக்குப் பதிலாக ஒரு மேல்முறையீட்டு இணை ஆணையரிடமிருந்து மற்றொரு மேல்முறையீட்டு இணை ஆணையருக்கு அல்லது ஒரு மேல்முறையீட்டுத் துணை ஆணையரின் முன்பாக நிலுவையில் உள்ள ஒரு மேல்முறையீடு மற்றொரு மேல்முறையீட்டுத் துணை ஆணையருக்கு என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(ii) **(2)**–ஆம் உட்பிரிவில் "மேல்முறையீட்டுத் துணை ஆணையர் அல்லது ஒரு மேல்முறையீட்டு உதவி ஆணையர்" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக "மேல்முறையீட்டு இணை ஆணையர் அல்லது ஒரு மேல்முறையீட்டுத் துணை ஆணையர்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

**12.** முதன்மைச் சட்டத்தின் 57–ஆம் பிரிவில், 57–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(i) ஓரத்தலைப்பு உள்ளடங்கலாக "இணை ஆணையர்" என்னும் சொற்றொடரானது வருகின்ற இடங்களில் எல்லாம் "கூடுதல் ஆணையர்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(ii) **(1)**–ஆம் உட்பிரிவில், "துணை ஆணையர்" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக "இணை ஆணையர்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

13. முதன்மைச் சட்டத்தின் 58–ம் பிரிவில், 58–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(i) "மேல்முறையீட்டு உதவி ஆணையர்" என்னும் சொற்றொடரானது வருகின்ற இடங்களிலெல்லாம் "மேல்முறையீட்டுத் துணை ஆணையர்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(ii) "மேல்முறையீட்டுத் துணை ஆணையர்" என்னும் சொற்றொடரானது வருகின்ற இடங்களிலெல்லாம் "மேல்முறையீட்டு இணை ஆணையர்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(iii) "துணை ஆணையர்" என்னும் சொற்றொடரானது வருகின்ற இடங்களிலெல்லாம் "இணை ஆணையர்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

14. முதன்மைச் சட்டத்தின் 59–ஆம் பிரிவில், **(1)**–ஆம் உட்பிரிவில், "இணை ஆணையர்" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக "கூடுதல் ஆணையர்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். 59–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

60–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

15. முதன்மைச் சட்டத்தின் 60–ஆம் பிரிவில் “துணை ஆணையர்” என்னும் சொற்றொடரானது வருகின்ற மூன்று இடங்களில் “இணை ஆணையர்” என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

63–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

16. முதன்மைச் சட்டத்தின் 63–ஆம் பிரிவில், (2)–ஆம் உட்பிரிவில், “மேல்முறையீட்டு உதவி ஆணையர் அல்லது மேல்முறையீட்டுத் துணை ஆணையர்” என்னும் சொற்றொடருக்குப் பதிலாக “மேல்முறையீட்டுத் துணை ஆணையர் அல்லது மேல்முறையீட்டு இணை ஆணையர்” என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

67–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

17. முதன்மைச் சட்டத்தின் 67–ஆம் பிரிவில், (10)–ஆம் உட்பிரிவின் வரம்புரையில், “துணை வணிகவரி அலுவலர்” என்னும் சொற்றொடர் வருகின்ற இரண்டு இடங்களில் அதற்குப் பதிலாக “வணிகவரி அலுவலர்” என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

73–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

18. முதன்மைச் சட்டத்தின் 73–ஆம் பிரிவில் “துணை ஆணையர்” என்னும் சொற்றொடருக்குப் பதிலாக “இணை ஆணையர்” என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

85–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

19. முதன்மைச் சட்டத்தின் 85–ஆம் பிரிவில், (2)–ஆம் உட்பிரிவில், (g)– எனும் கூறில்,

(i) “உதவி ஆணையர்” என்னும் சொற்றொடர் வருகின்ற மூன்று இடங்களில் “துணை ஆணையர்” என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(ii) “அல்லது ஒரு மேல்முறையீட்டு உதவி ஆணையர் அல்லது ஒரு மேல்முறையீட்டுத் துணை ஆணையர் அல்லது ஒரு துணை ஆணையர் அல்லது ஒரு இணை ஆணையர்” என்னும் சொற்றொடருக்குப் பதிலாக “அல்லது ஒரு மேல்முறையீட்டுத் துணை ஆணையர் அல்லது ஒரு மேல்முறையீட்டு இணை ஆணையர் அல்லது ஒரு இணை ஆணையர் அல்லது ஒரு கூடுதல் ஆணையர்” என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

செல்லத்தக்க தாக்குதல்.

20. முதன்மைச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்த போதிலும், இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியன்றோ அல்லது அதன் பின்னரோ, முதன்மைச் சட்டத்தின் படி, அதிகாரமைப்பு எதனின் முன்பாகவும் செய்யப்பட்ட விண்ணப்பம் எதுவுமோ அல்லது நிலுவையிலுள்ள நடவடிக்கை அல்லது மேல்முறையீடு அல்லது சீராய்வு எதுவுமோ, இந்தச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி அந்த அதிகாரமைப்பின் முன்பாக செய்யப்பட்டிருப்பதாகவும் நிலுவையில் இருப்பதாகவும் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் இந்தச் சட்டம் வெளியிடப்படும் தேதிக்கு உடனடி முன்பாக அத்தகைய அதிகார அமைப்பினால் பிறப்பிக்கப்பட்ட ஆணை எதுவும் இந்தச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின் வகைமுறையின்படி பிறப்பிக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2009–ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 5–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—**

**சட்ட எண் 26/2009**

***2006-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம் .***

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப்பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

1. (1) இந்தச் சட்டம், 2009 –ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரி (ஐந்தாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 32/2006. 2. 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச்சட்டத்தின், 3–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவிற்குப் பின்னர், பின்வரும் உட்பிரிவு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது :— 3–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

"(1–A) இந்த சட்டத்தில் என்ன அடங்கியிருந்த போதிலும், 2007–ஆம் ஆண்டு ஜனவரி 1–ஆம் நாள் முதல் 2007–ஆம் ஆண்டு மார்ச் 31– ஆம் நாள் வரையிலான கால அளவிற்கு (1)–ஆம் உட்பிரிவின் (a) அல்லது (b) கூறில் குறிப்பிட்டுள்ள வணிகர்களைப் பொறுத்த அளவில் இந்தச் சட்டத்தின் கீழ் வரிக்கணிப்பு செய்யும் நோக்கத்திற்காக, நீக்கம் செய்யப்பட்ட தமிழ்நாடு சட்டம் 1/1959. 1959–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தின் கீழ், 2006–ஆம் ஆண்டு ஏப்ரல் 1–ஆம் நாள் முதல் 2006–ஆம் ஆண்டு டிசம்பர் 31–ஆம் நாள் வரையிலான மொத்த விற்பனைத் தொகையும், இந்தச் சட்டத்தின்படி 2007–ஆம் ஆண்டு ஜனவரி 1–ஆம் நாள் முதல் 2007–ஆம் ஆண்டு மார்ச் 31–ஆம் நாள் வரையிலான மொத்த விற்பனைத் தொகையும் 2006–2007–ஆம் ஆண்டின் மொத்த விற்பனைத் தொகையாகக் கொள்ளப்படுதல் வேண்டும். அந்த ஆண்டில் மேற்சொன்ன (1)–ஆம் உட்பிரிவின் (a) அல்லது (b) கூறில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்த விற்பனைத் தொகையைவிட அதிகமான மொத்த விற்பனைத் தொகை கொண்ட வணிகர்களைப் பொறுத்த அளவில்,—

(a) அவ்வாறான வணிகர், இந்தச் சட்டத்தின் கீழ் வரி வசூலித்திருக்க வில்லையாயின், அந்த வணிகர் இந்தச் சட்டத்தின்கீழ் வரி செலுத்தக் கடப்பாடுடையவராக மாட்டார்,

(b) அவ்வாறான வணிகர் இந்தச் சட்டத்தின் கீழ் வரியை வசூலித்திருந்தால், அந்த வணிகர் இந்தச் சட்டத்தின் கீழ் வரி செலுத்தக் கடப்பாடுடையவராவார் மற்றும் இந்தச் சட்டத்தின் கீழ் உள்ள அனைத்துப் பிரிவுகளும் அந்த வணிகருக்குப் பொருந்துதல் வேண்டும்.".

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2009–ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 6 ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது ; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—**

**சட்ட எண் 28/2009**

***1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்திய குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

**1. (1)** இந்தச் சட்டம், 2009–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**(2)** இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 21/1994. **2.** (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 110–ஆம் பிரிவில், (g) எனும் கூறில், “அல்லது ஏரி” என்று வருகின்ற சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும். 110–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**3.** முதன்மைச் சட்டத்தின் 112–ஆம் பிரிவில், (aa) எனும் கூறுக்குப் பதிலாக, பின்வரும் கூறானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:- 112–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

“(aa) ஏரிகளை அகழ்தலும், பழுதுபார்த்தலும், பேணி வருதலும்; மற்றும் குடிப்பதற்கான, சலவை செய்வதற்கான, குளிப்பதற்கான நோக்கங்களுக்கென நீரை வழங்குவதற்கான, நீர் வழங்கு கட்டுமானங்களைக் கட்டுதலும்;”.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2009–ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 6–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—**

**சட்ட எண் 29/2009**

***2006–ஆம் ஆண்டு இந்திய முத்திரை மற்றும் பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்திய குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பும் மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2009–ஆம் ஆண்டு இந்திய முத்திரை மற்றும் பதிவு (தமிழ்நாடு திருத்தம்) திருத்தச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 13/2008.

1–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 2006 ஆம் ஆண்டு இந்திய முத்திரை மற்றும் பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டத்தின் 1–ஆம் பிரிவில், (3) ஆம் உட்பிரிவில், ''அறிவிக்கையின் வாயிலாக குறிக்கலாம்'' என்று வருகின்ற சொற்றொடருக்குப் பின்னர் ''மற்றும் இந்தச் சட்டத்தின் வெவ்வேறு வகைமுறைகளுக்கு வெவ்வேறு தேதிகள் குறிக்கப்படலாம்'' என்னும் சொற்றொடரானது புகுத்தப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.